மெகார்தி விசாரணை செய்யப்படுவார்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் : ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu" : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா	சென்னை : ஆவணி 10உ வியாழன் (26—8—54)	மலர் : 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர் : ஆவணி 11உ வெள்ளி (27—8—54)	இதழ் : 63

ஐந்து குற்றச்சாட்டுகள்

தனிக்குழு விசாரணை செய்யும்

கம்யூனிச எதிரியின் போக்கு

பிடிக்காத அமெரிக்க செனட்டின் நடவடிக்கை

செவ்வாயன்று பொது விசாரணை ஆரம்பம்

கம்யூனிச எதிர்ப்பு என்ற போர்வையில் தனது அதிகாரங்களைத் தவருகப் பயன்படுத்தினுர் என்று மெகார்தி விசாரணை செய்யப்பட இருக்கிருர்.

அமெரிக்காவில் கம்யூனிச மனப்பான்மையுடன் உள்ளவர்கள் பற்றி விசாரணை செய்யவும், அமெரிக்காவிற்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபடும் அமெரிக்கர்களின் மீது விசாரணை செய்து அவர்களைத் தண்டிக்கும் நோக்குடனும், அமெரிக்க செனேட் சபை நியமித்த கம்யூனிச விசாரணைக் குழுவின் தலைவராக மெகார்தி இருந்து வருவது நினைவிருக்கலாம்.

'கம்யூனிஸ்டுகளை விசாரணை செய்கிறேன்; அமெரிக்க எதிரிகளைத் தண்டிக்கப்போகிறேன்,' என்று மெகார்தி அட்டகாசம் செய்ததும், அமெரிக்காவின் முன்னுள் ஜனுதிபதி ட்ருமனையே மெகார்தி தனது குழுவின் முன்னர் சாட்சியம் கூற அழைத்ததும், அமெரிக்காவில் மெகார்தியின் மீது பலத்த எதிர்ப்பை உருவாக்கியது.

மெகார்தியின் கண்ணேட்டம், அமெரிக்க அரசாங்க உத்தியோகஸ்தர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மீதும் சென்றது.

நாட்டின் எதிரிகளைக் கண்டுபிடிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, செய்யும் தகாத செயல்களைக் கண்டு அமெரிக்காவில் மெகார்தியை செனட்டர் பதவியிலிருந்து திரும்ப அழைக்கவேண்டுமென்று பலர் வற்புறுத்த ஆரம்பித்தனர்.

மெகார்தியின் போக்கில் அதிருப்தி கொண்ட அமெரிக்க செனேட் சபை அவரையே விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்து தனிக் குழு ஒன்றை நியமித்தது.

வாஷிங்டன், ஆக. 24— அமெரிக்க செனேட் சபையின் தனி விசாரணைக் குழு ஒன்று செனேட்டர் மெக்கார்தியை வருகிற செவ்வாய்க்கிழமை பற்றி விசாரிக்கத் துவங்கும் என்று தெரிகிறது.

கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் மெகார்தி, தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அப்பால் சென்று தகாத முறையில் நடந்துகொண்டார் என்பதுபற்றி பொது விசாரணை நடைபெறுமாம்.

அமெரிக்க செனேட் சபை உறுப்பினர்களின் மீது அவதூறு கூறியது, அமெரிக்க தளபதி ஒருவரின் மீது பழி சுமத்தியது, சட்டத்தை மீறுமாறு சர்க்கார் ஊழியர்களைத் தூண்டியது, இரகசியக் குறிப்புகளையும், செய்திகளையும் பயன்படுத்தியது போன்ற குற்றங்களுக்காக செனேட்டர் மெகார்தி விசாரணை செய்யப்படுவார்.

விஸ்கான்சனிலிருந்து மெகார்தி செனேட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இவர் மீது செனேட் சபை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பது பற்றி இந்த விசாரணைக் குழு தீர்மானித்து செனேட்டுக்கு சிபார்சு செய்யும்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி விசாரணை ஆரம்பமாவதில் ஒரு நாள் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

மெகார்தியை விசாரணை செய்யும் குழுவில் ஆறு பேர் உள்ளனர். அக்குழுவின் தலைவரான ஆர்தர் வாட்கின்ஸ் மெகார்தியின் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் அடங்கிய நகல் ஒன்றை மெகார்தியிடம் கொடுத்திருக்கிறார்.

திரு-தமிழர் தலைவர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டு வருமாறு கட்டளை

திரு-கொச்சி நீதிமன்றம் உத்தரவு

தலைவர்கள் துன்புறுத்தப்பட்டார்களாம்!

எர்ணுகுளம், ஆக. 25— காவலில் வைக்கப்பட்டுள்ள திருவாங்கூர் தமிழர் தலைவர்களை ஏன் விடுதலை செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு திரு—கொச்சி உயர்நீதி மன்றம் சர்க்காருக்கும், திருவனந்தபுரம் ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

காவலில் உள்ளவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 'ஹேபியஸ் கார்பஸ்' மனுக்களை, 31-ந் தேதியன்று உயர்நீதி மன்றத்தின் 'புல் பெஞ்ச்' விசாரித்துத் தீர்ப்பளிக்கும் என்று தெரிகிறது.

தோழர்கள் குஞ்சன் நாடார், தாணுலிங்க நாடார், எம். வில்லியம் உள்பட 13 பேர் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

வாரண்ட் இல்லாமல் கைது செய்ததாகவும், மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவில்லை என்றும், தங்களைப் போலீசார் துன்புறுத்தியதாகவும் அவர்கள் தங்கள் மனுவில் புகார் செய்துள்ளனர்.

காவல் கைதிகளை 31-ந் தேதியன்று நேரில் ஆஜர் செய்விக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

☆

அடக்குமுறைக்கு கண்டனம்

ராமசாமி பிள்ளை அறிக்கை

திரு—கொச்சி சட்டசபையின் உறுப்பினரும், பி—சோ. கட்சியினருமான டி. எஸ். ராமசாமி பிள்ளை திரு—கொச்சியில் நடைபெற்ற, நடைபெறுகிற அடக்குமுறைக் கொடுமைகளைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடுவதாவது:—

"நான் பலாத்காரத்தைக் கண்டிப்பவன் எனினும், சுதந்திரப் போராட்டங்களிலும், பொறுப்பாட்சிக் கிளர்ச்சிக் காலங்களிலும் நடந்த பலாத்காரம் தியாகிகளிலெல்லாம் ஒப்பிடும் அளவுக்கு இது அவ்வளவு பெரிய பலாத்காரமல்ல; தமிழ்ப் பிரதேச போலீஸ் ஸ்டேஷன்களிலெல்லாம், தண்டனையடைந்த சத்தியாக்

கிரகிகளைக்கூட சித்திரவதை செய்வதற்கு எவ்வித நியாயமும் கூறமுடியாது. இது மிகவும் கோழைத்தனமான குற்றமாகும். சர். சி. பி.—யின் எதேச்சாதிகார ஆட்சியில்கூட இத்தகைய அநாகரீகம் இவ்வளவு பெரிய அளவில் நடந்தது இல்லை. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைக்கூட எந்த சர்க்காரும், இவ்வாறு துன்புறுத்தாது.

"எனது கூற்று தவறானது என்று நிரூபிக்குமாறு சர்க்காருக்கு சவால் விடுகிறேன், இது மனிதவர்க்கம் சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றிற்கு எதிரான குற்றமாகும்."

★

307 பேர் மீது வழக்கு: 110 பேர் கைது

திரு—தமிழர்கள் விடுதலை தினத்தை ஒட்டி நடைபெற்ற சம்பவங்களுக்காக இதுவரை தென் திருவிதாங்கூரில் 307 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, 110 பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்களாம்.

இந்திய-எதிர்ப்பு பிரசாரம்

நேபாளத்தில் நடைபெறுகிறது?

பிரிட்டிஷ், அமெரிக்கர்கள் தூண்டுகின்றனராம்!

காட்மண்டு, ஆக. 25— நேப்பாள ஆலோசனைக் கவுன்சிலின் உறுப்பினரும், நேபாள காங்கிரஸ் தலைவருமான வேதானந்த ஜா என்பவர், நேப்பாளத்தில் உள்ள சில பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரஜைகள், இந்திய எதிர்ப்பு உணர்ச்சியைத் தூண்டிவிடுகிருர்கள் என்று கூறியுள்ளார்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசிய அவர், இப்படிப்பட்ட வெளிநாட்டுக்காரர்களிடம் சர்க்கார் கண்காணிப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்று கூறினுர்.

பிரிட்டிஷ் இராணுவத்தின் உள்ள 8000 கூர்க்க சிப்பாய்களை, மலேயாவில் ஆசியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் பயன்படுத்துவதில்லை என்ற உறுதியைப் பிரிட்டனிடம் பெறவேண்டுமென்று அவர் மேலும் கூறினுர்.

வட மொழி, திராவிட மொழிகளின் வேறுபாடு!

தெற்கே இந்தி பரவாமைக்கு அதுவே காரணம்!

வட மொழிகளின் கலப்படத்தன்மை! தென்னிந்திய மொழிகளின் தூய்மை!!

"இந்தி மொழி பிராகிருத மொழி குடும்பத்தைச் சேர்ந்தது; வங்காளம், ஒரியா, பாஞ்சாலி, மகதி, மராத்தி, லைதாரபி. குஜராத்தி போன்ற மொழிகளும் பிராகிருத மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவைகள்; இந்த மொழிகள் அனைத்துக்கும் ஆணிவேர் போன்றது வடமொழி; வடமொழியினின்றே இவைகள் தோன்றின;

"தென் இந்திய மொழிகள் அடிப்படையாகவே திராவிட இனத்தைச் சேர்ந்தவை; இவைகளின் அமைப்பு வடமொழியினைப் போன்றதல்ல; அடிப்படையில் அவைகள் திராவிட இனத்தைச் சேர்ந்தவைதான்;

"அதுமட்டுமன்றி, வட இந்திய மொழிகளில் அரபி, பர்சிய மொழிகளின் சொற்கள் கலந்து கிடக்கின்றன; அச்சொற்கள் வட இந்திய மொழிகளின் ஒரு பகுதியாக ஆகியுள்ளன;

'ஆனுல் தென் இந்திய மொழிகளில் இந்த நிலைமை கிடையாது; மொகலாயர் படையெடுப்புக்கு முன்பிருந்தே எத்தனையோ அரேபிய, ஐரோப்பிய வியாபாரிகள், தெற்கே வந்திருக்கிருர்கள்; அதுக்கேயிருந்து அனுப்பப்பட்ட ரெஜினியூ முறைகளின் காரணமாக நுழைக்கப்பட்ட சில சொற்கள் தவிர, தென்இந்திய மொழிகளில் அரபி, பர்சிய மொழிகளின் சொற்கள் கலக்கப்படவில்லை,"

என்று கல்கத்தாவிலிருந்து வெளியாகும் 'ஸ்டேட்ஸ்மென்' இதழில், வெங்கடகிருஷ்ணன் என்பவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கூறுகிருர்.

தென்னுட்டில் ஏன் இந்தி மொழி பரவவில்லை என்பதை விளக்கும்போதுதான், அவர் மேற்கண்டவாறு கூறுகிருர்.

தென் இந்தியர்களுடன் வட இந்தியர்கள் தாராளமாகப் பழகுவதில்லையென்றும், வட இந்தியர்களிடையே காணப்படும் இந்த வெறுப்பின் காரணமாக, இந்தி மொழியைக் கற்றுக்கொண்டிருக்கும் தென் இந்தியர்கள் அம்மொழியைப் பேச வாய்ப்பின்றி இருக்கின்றனர் என்றும் அக்கடிதம் மேலும் கூறுகிறது.

சாலிஸ்பரி, ஆக. 24— வடக்கு ரொடீஷியா ஆப்பிரிக்கக் காங்கிரஸ் தலைவர்களை தென் ரொடீஷியாவுக்கு வந்த ஒருமணி நேரத்தில் வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர்கள் உடனே விமானம் மூலம் வட ரொடீஷியாவுக்கு புறப்பட்டனர்.

காரைக்கால் கவர்னரும் மூட்டை கட்டுகிருர்?

கொழும்பு, ஆக. 25— காரைக்காலில் பிரெஞ்சு கவர்னராயிருக்கிறவரும், பாரிஸ் திரும்பும் வழியில் இங்கு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கவர்னரின் சாமான்களடங்கிய பதின்மூன்று 'மூட்டை முடிச்சுகள்' இரண்டு நாட்களுக்கு முன்பு இங்குள்ள கனகேசன் துறைக்கு வந்துள்ளனவாம். கொழும்பிலிருந்து காரைக்கால் கவர்னரே அவைகளை எடுத்துச் செல்வாராம்!

நம் நாடு

சென்னை 26-8-54 வியாழன்

கோழி பறிகொடுத்த குப்பன்!

அழகான கோழி! குப்பன் அதை வளர்த்து வந்த அருமையை அனைவரும் பாராட்டினர். கோழியும் கோலமயில் போல ஆடிவந்தது. அதன் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருந்தான் சுப்பன்! ஊரார் குப்பன் வளர்த்து வந்த கோழியைப் பாராட்டியது, சுப்பனுக்குக் கோபத்தையும் பொறாமையையும் உண்டாக்கிற்று!

குப்பன் வளர்த்து வந்த கோழி, ஒருநாள் காணாமற் போய்விட்டது. குப்பன் குடும்பத்தாருக்கு வருத்தம் பெரும் அளவில்!

குப்பனிடம் கேட்டார்கள், கோழி எங்கே என்று; தேடித் தேடிப் பார்த்தார்கள்; கோழி கிடைக்கவேயில்லை; குப்பனும் கோழி பற்றி ஒரு தகவலும் கூறவில்லை.

குப்பனும் சுப்பனும் விருந்துண்டு களித்தார்கள்.

'பதமாகச் செய்திருக்கிறது! பக்குவமான வேக்காடு! மசாலா சுவை தருகிறது!'—என்றான் குப்பன்.

'ஆமாம்; எனக்கு எப்போதும், இதிலே பழக்கம் உண்டு; என் சமையல் முறையைப் பலரும் பாராட்டுவர்; காரம் அதிகம் இராது—அதற்காக நெய் சற்றுத் தாராளமாகச் சேர்த்திருக்கிறேன்; மல்லிகைச் சம்பா அரிசி அல்லவா இது; எனவேதான், மணம் அதிகமாக இருக்கிறது,'—என்றான் சுப்பன்.

குப்பனும் சுப்பனும், மகிழ்ச்சியுடன் விருந்துண்டனர்; குப்பன் வீட்டாரோ, கோழி எங்கே, கோழி எங்கே, என்று தேடிக் கொண்டிருந்தனர்!

கோழியோ கிடைக்கவில்லை; எப்படிக் கிடைக்கும்? குப்பனும் சுப்பனும் சாப்பிட்டது, கோழி பிரியாணியல்லவா!!

குப்பன் வீட்டாருக்குத் தெரியாது—சுப்பனிடம், குப்பன் நேசமானது, இந்த பிரியாணி விருந்துக்காகத்தான்—என்று; அதிலும் தங்கள் அருமைக் கோழிதான் அந்த விருந்துக்குப் பயன்பட்டபோகிறது என்பது அவர்களுக்குத் துளியும் தெரியாது.

'சுப்பன் என்னிடம் வலிய வலிய நேசமாக இருக்க வருகிறான்; எப்படி அவனை உதறித் தள்ளுவது,' என்று சமாதானம் கூறினான்;

'சுப்பன் நமது கோழி மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக்கிறானே; சினேகிதன் போல நடித்து, கோழியைக் கொன்றுவிட்டான் என்ன செய்வது,' என்று எச்சரித்தார்கள்;

'வீண் சந்தேகம், உங்களுக்கு! நான் என்ன அவ்வளவு ஏமாளியா! காணுவது நமது கோழியைப் பறிகொடுப்பதாவது,'—என்றெல்லாம் வீரவேசமாகப் பேசி, குடும்பத்தாரின் வாயை அடக்கிவிட்டான் குப்பன்!

கோழி பிரியாணி, குப்பன் சுப்பன் இருவருக்கும் ருசித்தது!!

குடும்பத்தாரை, ஊரார் கேலி செய்தனர்!

'எங்கே கோழி, எங்கே கோழி,' என்ற கேள்விக்கு, குப்பன் தந்த ஒரே பதில், கோழி பிரியாணி சாப்பிட்ட பிறகு, வெற்றிச்சங்கொலி போல வெளிவந்த ஏப்பம் தான்!!

☆

கோழி பறி கொடுத்த குப்பன் கதைபோல, அரசியல் சம்பவமொன்று நடைபெற்று விட்டிருக்கிறது.

தென்ஆற்காடு மாவட்ட வன்னியப் பெருங்குடி மக்கள், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வெறுத்து, உழைப்பாளர் கட்சி அமைத்து பொதுத்தேர்தலில் ஈடுபட்டு, இந்திய துணைக் கண்டம் ஆச்சரியப்படும்படியான அரிய வெற்றி பெற்றனர்!! தேர்தலில், உழைப்பாளர் கட்சியின் சின்னம், கோழி!!

கோழி, குப்பை கிளறும்; கூரை ஏறிக் கூவும்; என்றைக்கேனும் ஓர் நாள் அதன் கழுத்தைத் திருகிக் கொன்று, 'பிரியாணி' செய்துவிடுவார்கள்—என்று, காங்கிரசார் தேர்தலின்போது கேலி பேசினர்; ஆனால், கோழிப் பெட்டிக்கே மக்கள் 'ஓட்' அளித்தனர்—உழைப்பாளர் கட்சி பெருமிதமான வெற்றி பெற்றது—அதன் தலைவர் எஸ். ராமசாமி அரசியலில் ஓர் பெரும் புள்ளியுமானார்!

அவர் நிலை உயர்ந்ததற்கும், வன்னியகுல மக்களின் செல்வாக்கு வளர்ந்ததற்கும், காரணமாக இருந்த உழைப்பாளர் கட்சிக்கு, பல கட்சிகள் காங்கிரஸ் கட்சியின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்க்கும் எண்ணம் முற்போக்குக் கட்சிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்து வந்தது.

பெருமிதமான வெற்றியின் காரணமாக, தென் ஆற்காடு மாவட்ட அளவிலே இருந்து வந்த உழைப்பாளர் கட்சி, தென்னாடு முழுவதிலும் தழைத்து, வன்னியப் பெருங்குடி மக்களுக்கே பெரும் பயன்படும் பாசறையாக இருந்து வந்தது!

பிற்படுத்தப்பட்ட எல்லா மக்களுக்கும் ஏற்ற கட்சியாக உருவெடுத்து, தென்னாட்டில் ஆளும் கட்சியாக மாறவும் வாய்ப்பு இருக்கிறது என்ற நிலை வேகமாக வளர்ந்தது.

ஆனால், அந்தோ! கோழி பறி போய்விட்டது—கொல்லை குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது—பதவி காரணமாக, உழைப்பாளர் கட்சித் தலைவர், காங்கிரசுடன் குலவலானார்; குறை கூறினர் பலர்; கொதித்தெழுந்தனர் சிலர்; திகைத்தனர் மற்றையோர்; அவர்களுக்கும் அவர் அளித்த பதில், 'நானொன்றும் கட்சியைக் கலைத்துவிடவில்லை; காங்கிரசிலே மூழ்கிவிடவில்லை; உழைப்பாளர் கட்சி அப்படியே இருக்கிறது, உருக்குலையவில்லை; கோழி இருக்கிறது, பறிபோக விடமாட்டேன்,' என்பதாகும்.

அரசியல் தெளிவுகொண்டு, ஆசைக்கும் அச்சத்துக்கும் ஆட்படாத சிலர், ஆண்மையுடன் கிளம்பி, உழைப்பாளர் கட்சித் தலைவரின் போக்கைக் கண்டித்தனர்; அவர்களுக்குப் பெரும் அளவில் ஆதரவு கிடைத்தது; உழவர் கட்சி உதித்திருக்கிறது; ஜில்லா போர்டு தேர்தலில், உழவர் கட்சி ஈடுபடத் தீர்மானித்திருக்கிறது.

இந்த நிலையிலும் எஸ். ராமசாமி வன்னியகுல மக்களுக்கு நம்பிக்கை தருவதுபோல, 'ஜில்லா போர்டு தேர்தலில் நமது உழைப்பாளர் கட்சி ஈடுபடும்; கோழிப் பெட்டி உண்டு,' என்று கூறிவந்தார்!

இப்போது, விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டது! கோழிப் பெட்டி கிடையாது!!

தென்ஆற்காடு மாவட்ட தேர்தலில் கோழிப் பெட்டி இருக்காது! எல்லாம் மாடு!!

மேயப்பா போன்ற பெரிய முதலாளிகளையும், செல்வம் படைத்த மிட்டா மிராசுகளையும் தோற்கடித்த கோழிப் பெட்டி, இனிக் கிடையாது! இதற்குக் கோழிக் கொடியோனும் அரசியலில் நுழைந்தவருமான ராமசாமி அவர்களே சம்மதம் அளித்துவிட்டார்!! கோழி பறிபோயிற்று!!

இரும்பது காங்கிரஸ் மந்திரி சபையில்—பார்ப்பது மந்திரி வேலை—கிடைப்பது சம்பளம்—வளமிருக்கட்டும் என்று காமராசர் கூறிவிட்டார்!

"கோழியும் கூடாது, கொக்கும் கூடாது; இனி மாடுதான் உமக்குச் சின்னம்—மாதச் சம்பளம் பெறுகிறீர், வளமிருக்கட்டும்—என்று கூறிவிட்டார்; அவரும் கோழியைக் கொடுத்துவிடச் சம்மதித்து விட்டார்!

வன்னியப் பெருங்குடி மக்கள், எந்தக் கோழிப் பெட்டி மூலம், தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளலாம்—ஆதிக்கக் காங்கிரசின் புதைபட்ட எதேச்சாதிகாரத்தை முறியடிக்கலாம்—என்று எண்ணினார்களோ, அந்தக் கோழியைப் பறிகொடுத்து விட்டு, எஸ். ராமசாமியார், குலவுகிறார்!

இந்தியப் பாராளுமன்றத்துக்கு, பல உறுப்பினர்களை அனுப்பி வைக்கும் அளவுக்கு நிலைபெற்றிருந்த கோழி இனிக் கூவாது! மாடு மிதித்துச் சாகடித்துவிட்டது! இந்த மகத்தான சாதனைக்குக் கிடைத்த பரிசு, மந்திரி பதவி!!

குப்பனும் சுப்பனும் 'கோழி பிரியாணி' சாப்பிட்ட கதைக்கும், இதற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது!!

விடுதலை வேண்டாமென்போர் யார்?

கழகத் தோழர்கள் பொறுப்பு குறித்து பொதுச்செயலாளர் அண்ணாதுரை

☆

திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமென்ற நமது லட்சியத்தைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள்.

ஒரு நாடு, அந்த நாட்டு மக்களிடம் இருக்க வேண்டுமென்பது எப்படித் தவறானதாகும்? சொந்த நாட்டுக்கு விடுதலை வேண்டுமென்பதற்கு விளக்கமா தேவை?

திராவிட நாடு திராவிடரிடம் தான் இருக்க வேண்டுமென்பதை கூடாதென்று சொல்ல யாரால் முடியும்?

இதை நிர்ணயிக்கும் நீதிமான்கள் யார்? உலகத்திலேயே கிடையாதே!

வெள்ளைக்காரன், இந்த நாட்டு மக்களை, 'உங்களுக்கு ஆளத் தெரியுமா?' என்றுகூட கேட்டான். தெரிகிறதோ, இல்லையோ! 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்' என்றதும் வெள்ளையனிடமிருந்த ஒழுக்கமும், ராஜதந்திரமும், அரசியல் யூகமும், அவனை இந்திய நாட்டிற்கு சுதந்திரத்தைத் தந்துவிட்டு ஓடச்செய்தன.

சுதந்திரம் மட்டுமல்ல; இவர்களிடம் இல்லாத ரயிலையும் விமானத்தையும் இராணுவத்தையும் தளவாடங்களையும் சேர்த்துத் தந்துவிட்டுப் போனான்.

நாமும் இன்று உணர்கிறோம்—திராவிட நாடு திராவிடரிடமிருக்க வேண்டுமென்று! இதை இந்த நாட்டு மக்கள் அத்தனை பேரும் உணர வேண்டுமென்று விரும்புகிறோம். இதில் தவறு என்ன?

நமது தந்தையர்கள் வீரத்தோடு உலவிய பூமியிலா இன்று நாம் உலவுகிறோம் என்று எண்ணும்போது, நமக்கு வெட்கம் விலாவைக் குத்துகின்றதே!

இந்தத் தென்னாட்டில் அன்று வாழ்ந்த மக்களின் வீர உணர்வையும், இன்று நாம் அடிமைகளாய் இருக்கிறோம் என்னும் நிலையையும் எண்ணும்போது, நம் மனம் எழுச்சி கொள்ளாமலா இருக்க முடியும்?

நம்மிடம் என்ன இல்லை இந்த நாட்டை நாமே ஆள்வதற்கு? ஆளும் தகுதியும், தேவையான வளமும் நம்மிடம் ஏராளமாக இருக்கிறது. எனவே நமது கழகத் தோழர்கள் நம்முடைய லட்சியத்தின் உயர்வு கருதி இந்த நேரத்தில் மிகப் பொறுப்பாகப் பேசவும், எழுதவும் வேண்டும்.

லட்சியத்தை ஈடேற்ற நமக்கு நிரம்ப ஆர்வம் வேண்டும்—ஆர்ப்பாட்டம் கூடாது!

எழுச்சி வேண்டும்—ஆவேசம் கூடாது!

உற்சாகம் வேண்டும்—வீண் ஆரவாரம் கூடாது!

நம்முடைய தோழர்கள் போராட்ட வேட்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

நம் ஒரு நிரந்தரப் போர்ப்படையினராக இருக்க வேண்டும்—தேவைப்படும்போது களம் புகத் தயாராக இருக்க வேண்டும்!

(காஞ்சிபுரம் மாநாட்டில் குறிப்பிட்டது)

☆

திரு-கொச்சி தமிழர் படும் இன்னல்

காமராசருக்குக் கடமையை உணர்த்துவோம்

திரு—கொச்சி தமிழர் படும் இன்னல்கள் குறித்தும், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் திராவிடர்க்கு வாழ்வு தரும் பிரச்னை குறித்தும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், காஞ்சிபுரம் அரசியல் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

இன்று, திரு-கொச்சி மாநிலத்தில் உள்ள தமிழர் பிரச்னை குறித்துப் பேசவேண்டும் என நீங்கள் எதிர்பார்ப்பது இயற்கையே.

திரு-தமிழர்கள், தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும் எனக் கோரி, தி. த. நா. காங்கிரஸ் போராட்டம் தொடங்கினர். தி. மு. கழகமும் தனது பங்கை அந்தப் போரில் செலுத்திற்று; ஆகஸ்ட் 6-ந் தேதியன்று அடையாள மறியலை அமைதியாக நடத்தி, 110 தோழர்கள் கைதாயினர்; அந்த அடையாள மறியல் நடந்தன்று அவ்வளவு பலாத்காரமும் நடைபெறவில்லை; அமைதியாகவே நடைபெற்றதாக திரு—கொச்சி சர்க்காரின் அறிக்கையே கூறுகிறது.

இந்நிலையிலும், அடையாள மறியல் நடந்தன்று நான்கூட அங்கில்லை. எப்படிப் போராட்டம் ஈடுபடுவது என்பதற்கான திட்டத்தைக்கூட காங்கிரசின் தோழர்களே தீட்டிக் கூறி இருக்கிறார்கள்.

சிறையிலிருந்த தி. த. நா. காங்கிரஸ் தலைவர் நேசமணி விடுதலை ஆனதும், 11-ந் தேதி பொதுவேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்; விடுதலை தினம் கொண்டாடி இருக்கிறார்கள்."

இந்த 'விடுதலை தினத்தில் தி. மு. கழகத் தோழர்கள் கலந்து கொள்ள அனுமதி இல்லை; கலந்துகொள்ளக் கூடாதென்பதால் வைத்துக் கொள்ளவில்லை.

11-ந் தேதியன்று வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்களில் 'பலாத்கார வாடை வீசியதாகக் குற்றம் சாட்டி சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 11 உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றனர். சர்க்கார் அறிக்கைப்படி போலீஸ்காரர்களும், தளவாடிகளும் நொறுக்கப்பட்டிருக்கிறதாம்.

மக்கள் மண்டியிட்டது அந்தக்காலம்!

— (:) —

மடாதிபதி மக்களை நாடுவது இந்தக்காலம்!

தன்மான இயக்க சாதனை பற்றி பொதுச்செயலாளர்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் இரண்டாவது அரசியல் மாநாட்டில் சிறப்புரை ஆற்றுகையில், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கம்யூனிஸ்டுகள், தி. மு. கழகத்திற்கும், காமராசருக்கும் தொடர்புகள் கற்பிப்பதைக் கண்டித்து (விவரம் நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது) பேசியதைத் தொடர்ந்து, மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இதுவரையில் நாம் செய்து வந்திருக்கிற சுயமரியாதை இயக்கப் பிரச்சாரம் என்ன விளைத்து விட்டது என்று சிலர் நினைக்கிறார்கள்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில், கட்டப்பட்ட புதிய கோவில்கள் எத்தனை; பள்ளிக்கூடங்கள் எத்தனை?

நடத்தப்பட்ட சமாராதனைகள் எத்தனை? துவக்கப்பட்ட பிரசவ விடுதிகள் எத்தனை?

ஆதீனங்களுக்கு மானியங்கள் புதிதாக எவ்வளவு தரப்பட்டன?

பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் கட்ட எவ்வளவு மானியங்கள் தரப்பட்டன?

இவைகளை எல்லாம் கணக்கெடுத்துப் பார்த்தால் எத்தனை கோடி ரூபாய்கள், மத காரியங்களுக்கு விரயமாகி இருக்கக் கூடியவை, 'மக்களுக்கு வாழ்வு தருவதற்காகச் செலவிடப்பட்டிருக்கின்றன என்று தெரிய வரும்.

சில நாட்களுக்கு முன் திருவண்ணாமலை கோவில் ஒன்றிலிருந்து அறிக்கை ஒன்று வெளி வந்தது. கோவிலில் நடைபெறும் அர்ச்சனை போன்ற காரியங்களுக்காக நாள்தோறும் ரூ 50 தேவைப்படுவதாகவும், அந்தச் செலவை ஏற்றுக்கொள்ள யாரேனும் பக்தர்கள் முன்வர வேண்டும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

பத்திரிகையில் விளம்பரம் செய்து பக்தர்களைத் தேடி அலைந்து, தினசரிச் செலவு செய்யப்பட வேண்டிய அளவுக்கு மக்களிடம் மதத் துறையில் அக்கறையற்ற தன்மை ஏற்பட்டுவிட்டிருக்கிறது என்பது தானே அதற்கும் பொருள்?

அந்த நிலைக்கு மக்களை இழுத்து வந்திருப்பது சுயமரியாதை இயக்கம்தானே!

முன்பெல்லாம் கோவில் காரியங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்தா நடைபெற்றன?

இன்று மடாதிபதிகள் எல்லாம் மக்களை நாடி வருகிறார்களே!

குன்றக்குடி அடிகளார் இப்பொழுதெல்லாம் மக்களிடம் பிரச்சாரம் செய்ய முன் வருகிறாரே!

அப்படி, மடாதிபதிகள், மக்களை நோக்கி எப்பொழுது வர ஆரம்பித்திருக்கிறார்கள்?

தருமபுர ஆதீனகர்த்தர் சமீபத்தில் பெண்களுக்கான பிரசவ விடுதி ஒன்றிற்கு ஏராளமான மானியம் தந்திருக்கிறாராம்!

முன்பெல்லாம், மக்கள் மடங்களுக்கு மானியம் தந்தார்கள்; இப்பொழுது மடாதிபதிகள் மக்களுக்குக் காணிக்கை கொடுக்கிறார்கள்!

இந்த மாற்றத்திற்கெல்லாம் யார் காரணம்?

சுயமரியாதை இயக்கத்தவர் பெருமை படவேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை.

பெண்களின் நன்மை கருதி இருதார மணத் தடைச் சட்டம் வந்திருக்கிறதே, அது யாரால்? சுயமரியாதை இயக்கப் பிரச்சார வலிமையினால்தானே!

எனவேதான், நாம், தொடர்ந்து சமுதாய சீர்திருத்தம் குறித்துப் பேசியாகவேண்டியவர்களாக இருக்கிறோம்.

★

கலைத்துறையில் கழகத்தின் ஈடுபாடு ஏன்?

சிலர், கலைத்துறையில் நாம் கவனம் செலுத்துவது பற்றிப் பேசுகிறார்கள்—'நாடகத்தாலும், சினிமாவாலும் ஒரு நாட்டைச் சீர்திருத்த முடியுமா,'—என்று கேட்கிறார்கள்.

'சீனாவில் மாசேதுங்கும், ரஷ்யாவில் லெனினும் சினிமாவாலும் நாடகத்தாலுமா மக்களுக்கு வாழ்வளித்தார்கள்,' என்றும் கேட்கிறார்கள்!

அவர்களுக்குச் சொல்லுகிறேன்—சீனாவிலும், ரஷ்யாவிலும் மடமைக் கருத்துக்கள் மக்களிடையே புகுத்தப்படுவதற்கு, கலைத்துறை உபயோகிக்கப்படவில்லை, இந்த நாட்டைப்போல! எனவே தான், மா-சே-துங்கிற்கும், லெனினிற்கும் கலைத்துறை பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

இந்த நாட்டில் கலைத்துறையைத்தான் மதவாதிகள் தங்கள் கருத்துக்களைப் பரப்ப அதிகமாக உபயோகித்திருக்கிறார்கள்; இன்னும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'ஔவையார்' படம் வெளிவந்தது; திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், வாசனுக்கு பொன்னாடை போர்த்தினார்; அதே வாசன், 'சந்திரலேகா' படம் வெளியிட்டபோது, அவருக்கும் பொன்னாடை போர்த்தாத ஆதீன கர்த்தர, 'ஔவையார்' படம் வெளிவரும்போது மட்டும் செய்வானேன்?

'ஔவையார்' படம் மூலமாக, கடவுள் நம்பிக்கையும், மதக்கோட்பாடும் வலுயுறுத்தப் பெறுகின்றன; அதனால், அந்த மத வளர்ச்சிக்காக இருக்கும் மடாதிபதி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்; இல்லையா? அப்படி இருக்கும்போது அந்த மத மூட நம்பிக்கைகளை ஒழிக்கப் பாடுபடும் நாம் ஏன் அந்த சினிமாவைப் பயன்படுத்தக் கூடாது?

மதத்தைப் பரப்ப சினிமாவும், நாடகமும் பயன்படுத்தப்படும்போது, பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்ப, நாம், அவற்றைப் பயன்படுத்துவது பிறருக்குத் தவறாகப்படுவானேன்?

ஒன்று, 'சினிமாவே வேண்டாம்,' என்று சொல்லுங்கள்; சரி; அதை விடுத்து, 'சினிமாவும் இருக்கும்; ஔவையாரும் வெளிவரும்; ஆனால், பகுத்தறிவு பரப்பும் சினிமா வரக்கூடாதென்றால் என்ன பொருள் இதற்கு?

அமெரிக்காவில், தணிக்கை போர்டு நியமித்து, சினிமா மூலம் கம்யூனிசக் கருத்துக்கள் பரவுவதைத் தடுக்க முற்பட்டிருக்கிறார்கள்.

சினிமா மூலமும் கருத்துக்கள் சொல்லப்பட முடியும், மக்களுக்கு என்பதை இந்தச் செய்தி சொல்லவில்லையா?

அதைத்தானே நாமும் சொல்கிறோம்.

சினிமா மூலம் கருத்துக்களைச் சொல்வது எந்தவிதப் பயனையும் தராது என்று சொல்லப்படுமானால், சர்க்கார் ஏன் தணிக்கை போர்டு வைத்திருக்கிறார்கள்? அவர்களிடம் ஏன் நீண்ட கத்தரிக்கோலையும் தருகிறார்கள்?

சினிமா பயன்படாது என்று கூறுபவர்கள் மூன்று வகையினர்;

ஒருவர், பழமை ஒழிக்கப்படுவது கண்டு மனம் பொறாத வைதீகர்கள்;

இரண்டாவது ரகம், சினிமாத் துறையில் புகுந்து தோல்வி கண்டவர்கள்;

மூன்றும் ரகத்தவர், இன்னும் தங்களுக்கு இடம் கிடைக்கவில்லையே என மனம் நொந்து போனவர்கள்; அவ்வளவு தான்.

அவர்கள், நாம் சினிமாவிலும், நாடகத்திலும் பங்கு பெறுவதைக் கண்டிப்பதற்குக் காரணம் அவற்றை நாம் செய்கிறோம் என்பதாலன்றி வேறொன்றுமில்லை."

சீனர்களை எதிர்த்து திபேத்தில் கலகம்

பலர் மரணம்

தென்கிழக்கு திபேத்தில் சீன அதிகாரிகளை எதிர்த்து, திபேத்தியர்கள் கலகம் செய்தனர் என்றும், அவர்களில் பலர் சீனத் துருப்புகளால் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

சீனர்களைக் குறைக்கு மாறாக கோரி, திபேத்தியர்கள் கலகம் செய்தார்கள் என்று தெரிகிறது.

யாத்ரீகர்களுக்கு நேர்ந்த கதி!

தெஹ்ரானுக்கு 30 மைல் வடமேற்கே உள்ள பாஜாத் என்னுமிடத்தில் உள்ள இமாம் ஜாதே பதாஷுத் மசூதியில் யாத்ரீகர்கள் தொழும்போது வெள்ளம் வந்ததால் மாண்டவர்கள் தொகை 2,000 இருக்குமென்று கூறப்படுகிறது.

இதுவரை 1,000-க்கு மேற்பட்ட பிணங்கள் கிடைத்திருக்கின்றன என்று தெரிகிறது. இரவு 2 மணிக்கு வெள்ளம் வரும்போது சுமார் 300 பேர் மசூதியில் இருந்ததாகவும், 1,000 பேர் அருகில் உள்ள குன்றுகளுக்கு ஓடிவிட்டதாகவும், மற்றவர்கள் 'இமாம் எங்களைக் காப்பாற்றுவார்' என்று மசூதியின் உள்ளேயே இருந்துவிட்டார்கள் என்றும் தெரிகிறது.

'இலங்கை இந்தியர்' பிரச்னை

நாம் காட்டும் 1001-வது காரணம்!

'ஏக இந்தியா' நண்பர்களுக்கு தங்கப்பழம் எடுத்துக்காட்டு

காஞ்சியில், 22-8-54 அன்று நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டில் தோழர் தங்கப்பழம் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; அதன் பிற்பகுதி தரப்படுகிறது:—

குடியாத்தம் தேர்தலிலே நாம் யாரையுமே ஆதரிக்கவில்லை—இருவருமே நமது 'திராவிட நாடு' லட்சியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்ற காரணத்தால்!

இதைப் பற்றி என்னவெல்லாமோ பேச சர்வ சாதாரணமாக முன்வருகிறார்கள், நமது எதிர்க்கட்சியினர்!

நமது வளர்ச்சி கண்டு கிலி கொண்டிருப்பவர்கள், நம்மீது பழி எதையாவது சுமத்திக் கொண்டுதான் இருப்பார்கள் போலும்!

இத்தனைக்கும் நம்மைக் குறை கூறுபவர்கள் யார் என்று பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது.

திரு—தமிழர் பிரச்சினை குறித்து பொதுச் செயலாளரின் நாகர்கோவில் சொற்பொழிவு சரித்திரப் பிரசித்தி பெற்றதாயிருந்திருக்கிறது. ஆங்குள்ள மக்கள், அண்ணா அவர்களின் கருத்துக்கு மகத்தான ஆதரவு தந்திருக்கிறார்கள். திரு—தமிழர் பேருக்கு ஆதரவாக அடையாள மறியல் செய்து, 110 தோழர்கள் சிறைக்கனுப்பியிருக்கிறது, அங்குள்ள தி. மு. கழகம்!

ஆனால் நம்மைக் குறைகூறுகிற கம்யூனிஸ்டு நண்பர்கள் தி. த. நா. காங்கிரஸ், 'விடுதலை நாள்' கொண்டாட ஆகஸ்ட் 9-ந் தேதியைக் குறிப்பிட்டிருந்ததை, தாங்களும் கலந்து கொள்வதாகவும், அதற்காக 11-ந் தேதியாக 'விடுதலை நாளை'ச் மாற்றிக் கொள்ளவும் கேட்டிருக்கிறார்கள்; அன்றே தாங்கள், 'மோட்டார் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை'யும் மேற்கொள்ளுவதாகவும் கூறியிருக்கிறார்கள்; ஆனால் நடந்தது என்ன? ஆகஸ்ட் 10-ந் தேதி இரவு திரு-கொச்சி அரசாங்கத்துடன் தாங்கள் செய்துகொண்ட சமரசத்தினால், 11-ந் தேதி வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. இப்படி, கம்யூனிஸ்டு நண்பர்கள், தி. த. நா. காங்கிரசாருடன் ஒத்துழைப்பதாகக் கூறி, கடைசி நிமிடத்தில் அவர்களை நிராதரவாக விட்டுவிட்டவர்கள் நம்மைக் குறை கூறுகிறார்கள்; கேலி பேசுகிறார்கள்.

இன்று இந்த நண்பர்கள் 'கம்ப ராமாயண' 'விளக்கம்' தர முற்பட்டிருக்கிறார்கள்.

'கல்லக்குடி போராட்டத்தால் மக்களுக்குக் கஞ்சி கிடைக்குமா?' என்று நம் நண்பர்கள் கேட்டார்கள்.

கம்ப இராமாயண காலட்சேபத்தில் மக்களுக்கு கஞ்சி கிடைக்குமா?'—என்று, நாம் கேட்கவில்லை, அவர்களை!

எனவே, முதிர்ந்து நிற்கும் பழத் தோட்டமாக நிற்கும் நம்மைப் பார்த்து அவர்கள் பொறுமைப்படுகிறார்கள். "அதுபற்றி நாம் கவலைப்படவும் தேவை இல்லை" என்ற பொதுச் செயலாளரின் அறிவுரையை நாம் ஏற்றுக் கொள்வோம்.

நாம் மீண்டும் மீண்டும் திராவிட நாடு பிரச்சினையை வலியுறுத்தி வருகிறோம். இதுவரை ஆயிரம் காரணங்கள் காட்டியிருக்கிறோம்—ஏன் திராவிட நாடு தனியாகப் பிரிந்தே ஆக வேண்டும் என்று!

இப்போது ஆயிரத்து ஒராவது காரணமாக, 'இலங்கை இந்தியர்' பிரச்னையைக் காட்டுகிறோம். வடநாட்டு அகதிகளுக்கு ஆடம்பரமான வாழ்வு தந்த டெல்லி ஆட்சி, இலங்கை இந்தியர் அவர் துடைக்க வாராதது ஏன்? பொறுப்பைத் தட்டிக் கழிப்பது ஏன்?

இந்த நாட்டிலே—திருநெல்வேலியிலே கிடைக்கிற சங்குகளை வட நாட்டினர் எடுத்துச் சென்று, அகதிகளுக்கு புனர்வாழ்வு தர, 'வளையல் தொழிற்சாலை' வைத்து நடத்துகிறார்கள்.

இந்த நாட்டில் மலிந்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க அந்தச் சங்குகளை வளையல்களாக மாற்றும் தொழிற்சாலையை, தென்னாட்டிலேயே ஏன் வைக்கக் கூடாது? பதில் கிடைப்பதில்லை.

இரண்டு 5 ஆண்டுத் திட்டங்களிலும் தென்னாட்டவர் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன்? பதில் இல்லை.

மக்களின் கவனத்தைக் கவர்ந்து அவர்கள் இதயகீதமாக, உயர்லட்சியமாக வளர்ந்துள்ள திராவிட நாடு கோரிக்கையை நாம் அடைந்தே தீருவோம்.

சிலர், நாம் திராவிடநாடு கோருவதாலேயே தமிழர் உரிமைகளை மறந்துவிட்டது போலவும் அதற்கில் அவர்கள் மட்டும் தான் அக்கரை காட்டுவது போலவும் பேசுகிறார்கள்.

'ஐக்கிய தமிழகம்' எனக்குரல் கொடுக்கிறார்கள். இந்த ஐக்கிய தமிழகக் கோரிக்கை எல்லாம் நாம் கூறி முடித்ததைதான்; புதியது எதுவுமில்லை.

நாம் கேட்கிற திராவிட நாடு, எந்த வகையிலும் ஐக்கியத் தமிழகத்தைப் புறக்கணிப்பது அல்ல. தமிழர்தம் உரிமை, சித்தூரிலோ திரு—கொச்சியிலோ, அன்றி வேறெங்குமோ பறிக்கப்பட்டால், நாம் திராவிட நாடு கேட்பதாலேயே வாளாயிருந்துவிடமாட்டோம்.

நாம் திராவிட நாடு கேட்பதெல்லாம், தெலுங்கரும், தமிழரும், மலையாளியும் கன்னடியரும், அவரவர் உரிமைகளுடன் ஒரே 'காம்பவுண்டு'ல் நான்கு வீடுகள் இருப்பது போன்று, அமைய வேண்டும் என்ற அடிப்படையில் என்பதை மாற்றார் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஆகவே, திராவிட நாடு கிடைக்கும் வரை நாம் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபடவும், பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் காட்டுகிற வழி சென்று கடமை தவறாது காரியம் நிறைவேற்றவும் நம்மை நாம் தயாராக்கிக் கொள்வோமாக!"

சலகண்டபுரத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம்

14—8—54ல், திரு.வி.க. திடலில், தோழர் இரா. நாண்டான் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இன்றைய அரசியல் நிலைமை பற்றி தோழர்கள் ப.[ட]. சண்முகம், ப. கண்ணன், செல்லப்பன், கிருட்டினன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், சென்னை அரசாங்க விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை மேலும் இரண்டு ஆண்டு நீடிக்குமாறும், விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து தருமாறு அரசாங்கத்தைக் கோரியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அமெரிக்கப் போக்கை மாற்ற அட்லியிடம் வேண்டுகோள்

தொழிற் கட்சித் தூதுக் குழு— சீனத் தலைவர் உரையாடல்

பீகிங், ஆக 25—

மக்கள் சீன அரசாங்கத் தலைவர் மா-சே-துங் அட்லி தலைமையில் சீனா சென்றுள்ள பிரிட்டிஷ் தொழிற் கட்சி தூதுக் குழுவினரைச் சந்தித்து மூன்று மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது.

அவர்கள் சந்திப்பின்போது சீனப் பிரதமர் சௌ-என்-லாய், உதவிப் பிரதம மந்திரிகள், சீன அரசாங்க உயர்தர அதிகாரிகள் ஆகியோரும் உடனிருந்தனர்.

மா-சே-துங், பிரிட்டிஷ் தூதுக் குழுவின் தலைவர் அட்லியிடம் உரையாடுகையில், "அமெரிக்கா, சர்வ தேச விவகாரங்களில் தனது கொள்கையை மாற்றிக் கொள்ளுமானால், மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளை இன்னும் தொடர்ந்து இராணுவமயமாக்காதிருக்கவும், பார்மோசாவைக் காவல் புரிகிற அமெரிக்காவின் ஏழாவது கப்பற் படையைத் திரும்பப் பெறவும், பிரிட்டிஷ் தூதுக் குழுவினர் அமெரிக்காவைத் தூண்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பில் நடைபெற்ற உரையாடல் பற்றிய விபரங்களைத் தூதுக் குழுவினர் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. பொதுவாக, சர்வதேச விவகாரங்களும், சீனா-பிரிட்டன் வர்த்தக சம்பந்தமாகவும் அவர்கள் பேசிக்கொண்டதாக மட்டும் அறிவிக்கப்பட்டது.

கடந்த பத்து நாட்களாக சீனாவில் தங்கி இருக்கும் தூதுக் குழுவினர், சீனாவின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டு வருகின்றனர் எனத் தெரிகிறது.

மா-சே-துங்கைச் சந்திப்பதற்கு முன் பீகிங்கில் உள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் விருந்தொன்று நடைபெற்றது. ஏராளமான சீன மந்திரிகள், அதிகாரிகள் மற்றும் பலரும் அந்த விருந்தில் கலந்து கொண்டனர். ஆடம்பரமின்றி நடைபெற்ற அந்த விருந்தில், மதுபானமோ, சொற்பொழிவுகளோ இருக்கவில்லை.

மா-சே-துங், சீன மக்கள் குடியரசுத் தலைவராக 1949-ல் பதவியேற்ற பிறகு, மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள் யாரையும் சந்தித்ததில்லை. முதன் முறையாக அட்லியைச் சந்தித்தார்.

கிராமங்களுக்கு மின்சார வசதி!

சென்னை, டெல்லியிடம் கடன் கேட்கின்றதாம்!

திட்டத்திற்கு அவசரம் தேவையில்லை என்று கூறும் டெல்லியின் அலட்சியப் போக்கு

கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரும் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் ரூ 58 கோடி கடன் கேட்கின்றது. இன்று டெல்லி ராஜ்யசபையில் கேட்ட கடன் பற்றி மத்திய அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறதென்று கேட்கப்பட்டபோது, உதவி நிதி மந்திரி அருண் சந்திர குஹா, "அதுபற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது" என்று பதிலளித்தார்.

"திட்டத்தின் அவசரம் கருதி மத்திய சர்க்கார் உடனடியாக கடனைத் தருமா" என்று கேட்டபோது மந்திரி, "[illegible] தாமதம் ஏதும் நிகழ[illegible]வில்லை" என்றும், "திட்டத்திற்கு எந்தவித அவசரமும் இருப்பதாக நினைக்கவில்லை" என்றும், "ஏற்கெனவே இந்தத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது" என்றும் கூறினார்.

பிரேஜில் ஜனாதிபதி தற்கொலை!

மக்களிடையே கலவரம்

நியூயார்க், ஆக. 25—

பிரேஜில் நாட்டு ஜனாதிபதி வர்காஸ் தற்கொலை செய்து கொண்டதாக ரியோடி ஜனிரோவிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் கொலை முயற்சி பற்றி விசாரணை செய்யும் பொருட்டு தாங்கள் இருவரும் ராஜினாமா செய்யலாம் என்று உதவி ஜனாதிபதி, வர்காஸிடம் கூறிய யோசனைக்கு அவர், 'நான் மாண்ட பிறகே பதவியை விடுவேன்,' என்று கூறினர் என்று தெரிகிறது.

தற்கொலை செய்து கொண்ட ஜனாதிபதியின் உடல் விமான மூலம் அவரது பிறந்த ஊரான சாவோபோர்ஜாவுக்கு எடுத்துச் செல்லும்போது பிரேஜில் மக்கள் பலர், பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று தெரிகிறது.

விமானம் புறப்பட்டவுடன், விமான நிலைய கட்டிடத்தின் மீது கல்லெறிந்தார்களென்றும் போலீசார் சுட்டதில் பலர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.

ஜனாதிபதியின் தற்கொலை நிகழ்ச்சிக்குப் பின்னர் பிரேஜிலில் பல இடங்களில் கலவரம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

வெள்ளச் சேதம்

சீனாவில் 3 கோடி பேர் துயரம்!

ஹாங்காங், ஆக. 25—

யாங்ட்சி நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், சீனாவில் 3 கோடி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

'சீனாவின் துயரம்' என்று கூறப்படும் மஞ்சள் நதியின் கரைகள் பெரு மழையின் காரணமாக உடைபடும் என்று தெரிகிறது.

★

அஸ்ஸாம் துண்டிக்கப்பட்டது

கௌஹாத்தி, ஆக. 25—

வெள்ளப் பெருக்கு காரணமாக அஸ்ஸாமில் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறதாம்; சென்ற ஜூனில் ஏற்பட்ட வெள்ளத்தால் 25 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். மீண்டும் இப்போது பிரம்மபுத்திராவில் கரை புரண்டோடும் வெள்ளத்தால் 5 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் குடியிருக்க வசதி செய்யும் பொருட்டு கோர்ட்டு கட்டடங்கள் பயன்படுகின்றன.

இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து அஸ்ஸாம் துண்டிக்கப்பட்டுவிட்டது என்று தெரிகிறது. தந்தி, இரயில் போக்குவரத்துக்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

தி மு.க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

★

28—8—54: திருவெண்ணெய் நல்லூர் மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

29—8—54: கல்லக்குடி மாலை 6 மணிக்கு தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்

30—8—54: காலை 9 மணிக்கு முசிரிக்கு அடுத்த குஞ்சாநாயக்கன் பாளையம் திருமணம்; மாலை 6 மணிக்கு திருச்சி தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

31—8—54: உறையூர் மாலை 6 மணிக்கு தி. மு. க. ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

2—9—54: கோடாச்சேரி மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

3—9—54: நாகப்பட்டணம் மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

கழகக் கூட்டங்கள்

★

திருவெண்ணெய்நல்லூர்

தி. மு. க. முதல் ஆண்டு விழா கார்னேஷன் டாக்கீஸ் அருகில் உள்ள திடலில்

28—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: தி. சி. சுந்தரம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

அ. பொன்னம்பலனார்

★

தொளார்

தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

28—8—54 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்.

★

செத்தியாதோப்பு பரிபூரணநத்தம்

தி. மு. கழக துவக்கவிழா

28—8—54 மாலை 5 மணிக்கு

தலைவர்: வெள்ளப்பிள்ளை

பேசுவோர்:

அ. கலைவாணன்

காழி ஒளி

நாஞ்சில் கண்ணப்பன்

க. அறிவழகன்

சொற் பயிற்சிக் கூட்டம்

28—8—54 இரவு 8 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழக மனையில் 'கடமை தேவை'ன்' என்னும் பொருள் பற்றி தோழர் ம. அ. கண்ணப்பனார் தலைமையில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

○ ○ ○

28—8—54 இரவு 8 மணிக்கு பொன்னாச்சி கழக அலுவலகத்தில் (மார்க்கட் ரோடு பே. என். கே. இல்லம்) ஒரு சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

35-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

28—8—54 இரவு 8 மணிக்கு கோடம்பாக்கம் நெ. 2, கெங்கம்மன் கோவில் தெருவிலிருக்கும் மாடி வீட்டில் தி. மு. க. செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

திரு—கோச்சி தமிழர்......,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட மதிகொண்ட சர்க்காராயிருந்தால், தானே கூட்டாளன்களைக் கொலுத்திவிட்டு, கிளர்ச்சிக்காரர்கள் மீது குற்றம் சாட்டி, கிளர்ச்சியை அடக்க எண்ணலாம்; ஆனால், இந்த பலாத்கார சம்பவங்களுக்கு யார் காரணமோ தெரியவில்லை. அதன் விளைவாக இன்று தொடர்ந்து கிளர்ச்சி நடைபெறுவது போய் விட்டதுடன், 'இனி இவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட மாட்டார்கள்,' எனக் கருதி கொடிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டு, நாற்பதுக் கணக்கானவர்களைக் கைது செய்து, சிறையிலும் கொடுமைப் படுத்துவதாகத் தெரிகிறது.

இது இன்றைய நிலை. தமிழர்களின் இன்றைய இந்த இரக்கத்தக்க நிலைகண்டு காமராசர் அரசாங்கம் இன்னும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

இதுவரையில்தான், வாளா இருந்து விட்ட காமராசர், இனியாவது இதுபற்றி அறிக்கை தருவாரா? அங்குள்ள தமிழர்களின் இன்னல்களைப் போக்க இங்குள்ள தமிழர்களே பேசாதிருந்தால யார்தான் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல முடியும்?

அங்கு நடக்கும் கொடுமைகளைக் கண்டித்து காமராசர் அறிக்கை வெளியிட வேண்டும்; முடிந்தால் காமராசர் அந்தப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும். செய்வாரா?

அப்போதுதான் நாம் காமராசர், ஆச்சாரியாரைவிட பொறுப்புணர்வுடன காரியம் செய்பவர் என்று தெறிந்துகொள்ள முடியும்.

மற்றும் காமராசர் இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர் பிரச்னை அவ்வளவு கடினமானதல்ல என்று குறிப்பிட்டதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அந்தச் செய்தி உண்மையானால், அதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

இலங்கையிலிருந்து திரும்புபவர்கள், ஐயாயிரம் பேர் மட்டுமல்ல; 3 இலட்சம் பேர்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் தாய் நாட்டில் பிச்சைக்காரர்களாய் அலைவது, நமக்கு வேதனை தராமல் எப்படி இருக்கும்?

எனவே, இந்தப் பிரச்னைகளில் எல்லாம் மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்க வேண்டும், காமராசர், என நாம் எதிர்பார்க்கிறோம்.

இந்த இரு பிரச்னைகளுக்கும் நல்ல பரிகாரம் தேட தி. மு. கழகம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

'ஆரிய சூழ்ச்சி'க்குத் தடை!

சென்னை, ஆக 25—

"அன்பின் வெற்றி" அல்லது "ஆரியச் சூழ்ச்சி", "நீதிக்கு எதிர்ப்பு" என்ற இரு நாடகங்களையும், நாடக சட்டத்தின் கீழ் அரசாங்கம், சென்னை மாநிலத்தில் நடிக்கக் கூடாதென்று தடை விதித்துள்ளதாகத் தெரிகிறது.

பிரெஞ்சு ஆதிக்கம் விரைவில் ஒழியும்?

நேரு நம்பிக்கை!

புதுடில்லி, ஆக 25—

மக்கள் சபையின் வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய தனது அறிக்கையை சமர்ப்பித்துப் பேசுகையில், பிரதம மந்திரி பண்டித நேரு, இன்றுள்ள சூழ்நிலைகள், பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்திலுள்ள இடங்களை விட்டு சீக்கிரமே வெளியேறக்கூடும் என்ற நம்பிக்கையை நமக்குத் தருகின்றன, என்று குறிப்பிட்டார்.

"பிரெஞ்சு சர்க்காருக்கும் நமக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடந்த பின் ஒப்பந்தங்களாக நல்லெண்ணத்துடனும் நல்ல நம்பிக்கையுடனும், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன; பிரெஞ்சுப் பிரமுகரும் இந்தப் பிரச்னைக்கு, பேச்சு வார்த்தைகள் மூலமாகவே நல்லதொரு அமைதியான முடிவு காண முடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்; எனவே, நாம் வெகு சீக்கிரத்திலேயே, பிரெஞ்சிந்திய பகுதிகளிலிருந்து பிரெஞ்சு ஆதிக்கம் வெளியேறும் என்று முழுமையும் நம்பலாம்" என்று அவர் குறிப்பிட்டார்.

இருட்டுக்கு 'இலக்கணம்!'

★

புதுடில்லி, ஆக. 25–

"ஒரு ரெயில்வேத் தொழிலாளி, தனது விறகுச் செலவை மிச்சப்படுத்த சிறிது நிலக்கரியும், தனது இருண்ட வீட்டில் ஒளி தர விளக்கேற்றுவதற்காக சில 'அவுன்ஸ்' மண்ணெண்ணெயும் எடுத்துச் சென்றால், திருட்டு [illegible] அல்ல,"

என்று மக்கள் சபை உறுப்பினரான எச். பி. சக்சேனா என்பவர் "ரெயில்வே ஸ்டோர்" பற்றிய மசோதா ஒன்றின்மீது நடந்த விவாதத்தின்போது குறிப்பிட்டார்.

"பெரிய அதிகாரிகள், பிறரை நாற்காலி இன்னும் பெரிய சாமான்கள் இவைகளை தங்கள் இல்லத்திற்கு எடுத்துச் செல்கிறார்களே, அதுதான் திருட்டாகும்" என்றும், "அத்தகைய அதிகாரிகளிடத்தில்தான் சர்க்கார் கவனிப்பாக இருக்க வேண்டும்,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெயர் சூட்டல்

விருத்தாசலம் தோழர் அ. சிதம்பரம் அவர்களுக்கு "பாண்டியன்" என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடையாக அளிக்கப்பட்டது—பெற்றோரும் — நன்றியுடையது—மோகனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. செழியன், [illegible] ஆகியோர் [illegible] சி. என். அண்ணாதுரை [illegible]